**தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அநுராதபுரம் கிளை அலுவலகம் இயங்கி வரும் கட்டிடத்துடன் கூடிய காணி 2016 ஆம் ஆண்டு முதல் பிரதேச செயலகத்தினால் நீண்ட கால குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் குறித்த காணியின் குடியிருப்பு காரணமாக ரூபா 14,616,000 குத்தகை தொகையை பிரதேச செயலகத்திற்கு செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செலுத்த வேண்டிய தொகை தொடர்பான தேவையான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குடியிருக்காத காணிக்காக ரூபா 14,616,000 தொகையை செலுத்தி 30 வருட காலத்திற்கு மாத்திரம் காணியைப் பெற்றதாலும் கட்டிடம் நிறுவனத்திற்கு பலனளிக்காததாலும் பொது நிறுவனங்களால் கட்டிடங்களை நிர்மாணித்து வாடகைக்கு விடுதல் 2022.04.26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி அமைச்சினால் நிறுத்தப்பட்டது. பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் அது குறித்து காணி ஆணையாளர் நாயகத்திற்கு விளக்கமளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் தீர்மானிக்கப்படக்கூடிய பொறுப்புக்களுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் சுட்டிக்காட்டப்பட்ட 16 பேரேட்டுக் கணக்குகளின் செலுத்த வேண்டிய மீதிகளுக்கும், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிகளுக்கும் பட்டியல்களின் பிரகாரமான மீதிகளுக்கும் இடையே ரூபா 794,593 வேறுபாடு காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டில் குறித்த கணக்கீட்டு பிழையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தொடர்புடைய இரட்டைப் பதிவுகள் மூலம் ஏற்கனவே இச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் பட்டியல்களிற்கு இடையேயான மீதிகள் சீர்செய்யப்பட வேண்டும். |
| (இ) | பெறுமதி குறிப்பிடப்படாத மற்றும் தலைமை அலுவலகம் மற்றும் கிளை அலுவலகத்தில் இருக்கும் 122 சொத்து உருப்படிகள் மீளாய்வாண்டில் மெய்மையாய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, சொத்துக்களின் நீடீத்திருக்கும் தன்மையை கணக்காய்வின் போது சரிபார்க்க முடியாதிருந்தது. | தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளில் சரிபார்க்கப்படாத 122 உருப்படிகள் தற்போது அகற்றப்பட்டு, நிதிக்கூற்றுக்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன் சொத்துப் பதிவேட்டில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து சொத்துக்களும் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 அளவில் நிறுவனத்திற்கு பெறவேண்டிய கணக்குகளில் 06 வருட காலப்பகுதிக்கு மேலாக ரூபா 5,622,549 பெறுமதியான பதின்மூன்று மீதிகள் காணப்பட்டதுடன், இதுவரை குறித்த தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பெறவேண்டிய கணக்குகளில் இலங்கை போக்குவரத்து சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் உள்ளடங்குகின்றது. | ஆகையால், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு இது தொடர்பில் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் 2022.03.30 ஆம் திகதிய கடிதம் மூலம் அவ்வாறான தொகை தமது கணக்கில் இல்லை என எழுத்துமூலம் அறிவித்துள்ளனர். | பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 8,688,684 கூட்டுமொத்த பெறுமதியான 22 செலுத்த வேண்டிய மீதிகள் இருந்தன, அதில் ரூபா 4,451,125 பெறுமதியான செலுத்த வேண்டிய மீதிகள் 06 வருட காலம் கடந்திருந்த போதிலும் நிறுவனம் அவற்றை தீர்ப்பனவு செய்வதில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | திருத்தப்பட்ட செலுத்த வேண்டிய மீதிகளின் தற்போதைய நிலைமை பின்வருமாறுள்ளது. ரூபா 2,411,933 மற்றும் ரூபா 1,470,832 பெறுமதியான செலுத்த வேண்டிய மீதிகள் இலங்கை போக்குவரத்துச் சபையினால் செலுத்தப்பட வேண்டிய மீதிகள் அல்ல என்பதற்கான ஆவண உறுதிப்படுத்தல் பெறப்பட்டது. மேலும், செயலாற்றல் பிணைமுறிக்கான பாதுகாப்பாக வழங்கப்பட்ட மீதிகளின் உத்தரவாதக் காலப்பகுதி இன்னும் காலாவதியாகியிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை உரிய திகதியில் செலுத்துவதற்கும், உத்தரவாதக் காலப்பகுதி முடிவடைந்த மீதிகளை ஆய்வு செய்து புத்தகங்களில் இருந்து பதிவழிப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தெடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் | நிறுவனத்தால் பணம் முதலீடு செய்யப்படும் போது நிதி அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட | எமது நிறுவனத்தின் வருமானம் அரச வங்கிகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் REPO ஆகியவற்றில் நிலையான வைப்புக்களாக முதலீடு | அதற்கான அங்கீகாரங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரிவு | வேண்டும். எவ்வாறாயினும், தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரமே ரூபா 106,700,000 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. | செய்யப்படும். இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி போன்ற நிறுவனங்களில் இருந்து வட்டி விகிதங்களை வரவழைத்து அதற்கேற்ப அதிக வட்டி விகிதத்தில் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள். நிதிப்பிரமாணம் 395(இ). | ஒவ்வொரு மாதத்தின் இறுதியில் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், ஒரு வங்கிக் கணக்கு தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பரின் வங்கி கணக்கிணக்கக் கூற்று 06 மாத கால தாமதத்துடன் தயாரிக்கப்பட்டிருந்தது. | 2022 மார்ச் வரை வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. | வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் உரிய திகதியில் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 9.12 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெறாமல் சுகாதார காப்புறுதி மேவுகையைப் பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டில் | குறித்த காப்புறுதி மேவுகையானது 2009 ஆம் ஆண்டு முதல் ஊழியர்களுக்கு வழங்கப்படும் நலன்புரி வசதியாகும். பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு 2021 ஆம் | சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 6,794,402 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஆண்டிற்கான சுகாதார காப்புறுதி மேவுகையாக ரூபா 6,794,402 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | |
| (ஈ) | 2006 இன் பெறுகை வழிகாட்டல்கள் | | | |
| | வழிகாட்டல் 4.2.1 (அ) | பெறுகை நிறுவனம் பிரதான பெறுகை திட்டத்தை தயாரிக்க வேண்டிய போதிலும் விரிவான பெறுகைத் திட்டம் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | வழிகாட்டல் 4.2.1 (அ) இன் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. பொது முகவரி முறைமை (Public Address System) கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் பல கிளைகள் நவீனமயமாக்கப்பட்டதுடன் பொது முகவரி முறைமைகள் தேவைப்படும் போது பல சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டன. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | வழிகாட்டல் 4.2.1 (அ) | குறைந்தபட்சம் 03 வருட காலத்திற்கு திட்டமிடப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் பிரதான பெறுகை திட்டத்தில் பட்டியலிடப்பட வேண்டியதுடன் வழிகாட்டல் (இ) இன் பிரகாரம் பிரதான பெறுகை திட்டம் ஆறு மாதங்களை விஞ்சாத இடைவெளியில் தொடர்ந்து நாளதுவரையாக்கப்பட வேண்டும். ஆனால், அதற்கிணங்க நிறுவனம் நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | மூன்று வருடங்களாக பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காத போதிலும், அது ஒரு வருட காலத்திற்கு தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த வருடத்தில் 06 மாத காலத்திற்குள் பெறுகைத் திட்டத்தை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 123,542,486 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 290,189,169 ஆகும். ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 166,646,683 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் குறைவடைந்தமை குறித்த வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

நிறுவனத்தின் முக்கிய வருமான உருப்படிகளில் உள்ளடங்கியுள்ள இலகுரக வாகன அனுமதிப்பத்திரங்களுக்கான மருத்துவச் சான்றிதழ்களை பரிசோதிப்பதன் மூலம் பெறப்படும் வருமானம் மற்றும் கனரக வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கான மருத்துவக் கட்டணங்கள் மூலம் பெறப்படும் வருமானம் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் முறையே 48 சதவீதம் மற்றும் 38 சதவீதத்தால் குறைவடைந்துள்ளன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| போதைப்பொருளின் தாக்கத்தினால் ஏற்படும் மோட்டார் வாகன விபத்துக்களை தடுக்கும் நோக்கில் சாரதிகளின் சிறுநீரில் மருந்துகளை பரிசோதிக்கும் செயற்திட்டத்திற்கு தேவையான இரத்த பரிசோதனை கருவித்தொகுதிகளை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டில் மாத்திரம் நிறுவனத்தினால் ரூபா 24,684,264 தொகை செலவிடப்பட்டுள்ளது. எனினும், இந்த சோதனை 2021 ஒக்தோபர் 01 முதல் 2022 மார்ச் 10 வரை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டதுடன் சோதனை கருவித்தொகுதிகள் இல்லாததால் இந்த செயற்திட்டம் பாதியில் கைவிடப்பட்டிருந்தது. இதனால், செயற்திட்டத்துக்காக ஏற்பட்ட செலவினம் பயனற்றதாகியிருந்தது. | நாட்டில் போதைப்பொருள் பாவனையின் கீழான சாரதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டதால் குறித்த சோதனையானது ஆரம்ப செயற்திட்டமாக அமுல்ப்படுத்தப்பட்டது. | நிறுவனத்தின் நோக்கங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 நவம்பர் 23 மற்றும் 2018 மே 15 ஆகிய திகதிகளில் நிறுவனத்தின் 33 பதவிகளுக்கு 454 பேர் கொண்ட பதவியணியினர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் | 2021.12.31 இல் உள்ளவாறான நிறுவனத்தின் பதவியணியினர் 375 ஆக இருந்ததுடன் அத் திகதியில் உள்ளவாறான வெற்றிடங்கள் 77 ஆக | வெற்றிட பதவிகளிற்கு உத்தியோகத்தர்களை ஆட்சோப்பு செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். எனினும், 2021 திசெம்பர் 31 அளவில் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் முறையே 375 மற்றும் 52 உத்தியோகத்தர்கள் நிறுவனத்தின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதனால் நிறுவனத்தில் 27 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டன. | இருந்தன, அதில் 61 மருத்துவ உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள், நியதிச்சட்ட நிறுவனங்களின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 01 மாதம் 07 நாட்கள் தாமதத்துடன் 2022 ஏப்ரல் 07 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேலும், நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2022.04.07 இல் எழுத்துமூலம் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |